பிரஸார் பாரதி
அகில இந்திய வானொலி, சென்னை- 4

05 08 2024 12 40
திங்கட்கிழமை பிற்பகல்

<u>தலைப்புச் செய்திகள் -</u>

1. ஃபிஜி சென்றுள்ள குடியரசுத் தலைவர் திருமதி திரௌபதி முர்மு அந்நாட்டு அதிபர் மற்றும் பிரதமருடன் இருதரப்பு பேச்சுக்கள் நடத்தவுள்ளார்.
2. நாட்டின் கிராமப்புறங்களில் உள்ள மக்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்த மத்திய அரசு தாராளமாக கடனுதவி வழங்கி வருவதாக நிதித்துறை இணை அமைச்சர் திரு பங்கஜ் சௌத்ரி தெரிவித்துள்ளார்.
3. முப்படைகளின் தளபதி ஜெனரல் அனில் சௌஹான் தலைமையில் இன்று புதுதில்லியில் முப்படைகளின் நிதி மாநாடு நடைபெறுகிறது.
4. வடகிழக்கு மாநிலங்களில் இன்று மிக கனமழை பெய்யக்கூடும் என்று இந்திய வானிலை ஆய்வு மையம் எச்சரித்துள்ளது.
5. பாரிஸ் ஒலிம்பிக் பேட்மிண்டன் போட்டியின் வெண்கலப் பதக்கத்திற்கான ஆட்டத்தில் இந்தியாவின் லக்ஷயா சென் இன்று மலேசியாவின் **Lee Zii Jia–**வை எதிர்கொள்கிறார்.

<u>*---- இனி விரிவான செய்திகள் ----*</u>

**[]<<<>>>[]**

குடியரசுத் தலைவர் திருமதி திரௌபதி முர்மு இரண்டு நாள் அரசுமுறைப் பயணமாக பிஜி சென்றுள்ளார்.

அந்நாட்டின் **Nadi** விமான நிலையத்தில் ஃபிஜியின் துணை பிரதமர் திரு வில்லியம் கவோக்கா, ஃபிஜிக்கான இந்திய தூதர் திரு பி எஸ் கார்த்திகேயன் உள்ளிட்டோர் வரவேற்றனர்.

திருமதி திரௌபதி முர்மு, ஃபிஜி நாட்டின் அதிபர் திரு வில்லியம் கட்டோனிவெரே, பிரதமர் சித்திவேனி ரபோக்கா ஆகியோரை சந்தித்து இருதரப்பு பேச்சுக்கள் நடத்தவுள்ளார்.

ஃபிஜி நாடாளுமன்றத்திலும் குடியரசுத் தலைவர் உரையாற்றவுள்ளார்.

அங்குள்ள இந்திய வம்சாவளியினர் அளிக்கும் வரவேற்பு நிகழச்சியில் பங்கேற்கும் அவர், காந்தி நினைவு கல்லூரி நிகழ்ச்சியிலும் அவர் கலந்து கொள்கிறார்.

**Nadi**-யில் உள்ள ஸ்ரீ சிவசுப்ரமணிய சுவாமி திருக்கோவிலிலுக்கும் சென்று குடியரசுத் தலைவர் வழிபாடு செய்ய உள்ளதாக அங்குள்ள எமது செய்தியாளர் ஸ்ரீசாய் தெரிவிக்கிறார்.

**[]<<<>>>[]**

நாட்டின் கிராமப்புறங்களில் உள்ள மக்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்த மத்திய அரசு தாராளமாக கடனுதவி வழங்கி வருவதாக நிதித்துறை இணை அமைச்சர் திரு பங்கஜ் சௌத்ரி தெரிவித்துள்ளார்.

மக்களவையில் இன்று துணைக் கேள்விகளுக்கு பதிலளித்த அமைச்சர், 2014-ஆம் ஆண்டு கிராமப்புற கடன் திட்டங்களுக்கு ஏழு லட்சத்து 30 ஆயிரம் கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டதாகவும், இந்த ஆண்டு பட்ஜெட்டில் 25 லட்சத்து 46 ஆயிரம் கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதாகவும் கூறினார்.

விவசாயிகள் கடன் அட்டை திட்டத்தின் கீழ் பயிர்க்கடனாக ஒன்பது லட்சத்து 82 ஆயிரம் கோடி ரூபாய் வழங்கப்பட்டுள்ளதாக அவர் தெரிவித்தார்.

விவசாயிகளின் நலன்களுக்காக பல திட்டங்களை அரசு செயல்படுத்தி வருவதாகவும் அவர் குறிப்பிட்டார்.

பிரதமரின் அனைவருக்கும் வங்கிக் கணக்கு திட்டத்தின் கீழ் 52 கோடிக்கும் மேற்பட்டோருக்கு புதிதாக வங்கிக் கணக்குகள் தொடங்கப்பட்டிருப்பதாகவும் அவர் கூறினார்,

முத்ரா மற்றும் ஸ்டார்ட்-அப் திட்டத்தின் கீழ் இளைஞர்கள் தொழில் தொடங்க கடனுதவி வழங்கப்பட்டு வருவதாகவும் அமைச்சர் தெரிவித்தார்.

இந்த ஆண்டு பட்ஜெட்டில் இளைஞர்களின் செயல் திறனை மேம்படுத்த பணியிடை பயிற்சி அளிப்பதற்கான திட்டம் தொடங்கப்பட்டிருப்பதாகவும் அவர் கூறினார்.

முத்ரா திட்டத்தின் கீழ் வழங்கப்படும் கடன் உச்சவரம்பு பத்து லட்சத்திலிருந்து 20 லடசம் ரூபாயாக உயர்த்தப்பட்டுள்ளதையும் அமைச்சர் திரு பங்கஜ் சௌத்ரி சுட்டிக்காட்டினார்.

[]<<<>>>[]

மாநிலங்களவையில் இன்று பல்வேறு கட்சிகளின் உறுப்பினர்கள் பொது முக்கியத்துவம் வாய்ந்த கேள்விகளை எழுப்பினர்.

பிஜேபி உறுப்பினர் திரு சமீத் பட்டாச்சாரியா, பங்ளாதேஷிலிருந்து மேற்குவங்க மாநிலத்திற்குள் அதிக அளவில் தொழிலாளர்கள் ஊடுறுவி வருவது குறிதது பிரச்சினை எழுப்பினார்.

பூகோளா ரீதியாக ஊடுறுவலுக்கான சாத்தியக்கூறுகள் அதிகம் இருப்பதாகக் கூறிய அவர், இதனை தடுக்க அம்மாநில அரசு உரிய நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொண்டார்.

மாநில அரசு எல்லைப்பகுதியில் ஊடுறுவல்களைத் தடுக்க எவ்வித நடவடிக்கையும் எடுக்கவில்லை என்று அவர் தெரிவித்தார்.

பாதுகாப்புக்கு இது ஒரு அச்சுறுத்தலாக இருப்பதாகவும் திரு சமீத் பட்டாச்சரியா குறிப்பிட்டார்.

ஆழ்துளை கிணறுகளை அமைப்பவர்கள் முறையாக பராமரிக்காமல் அதனை திறந்தே வைத்திருப்பதால் குழந்தைகள் உயிரிழக்கும் சம்பவங்கள் உத்திரபிரதேச மாநிலத்தில் அதிகம் நிகழ்வதாக பிஜேபி-யின் திருமதி தர்ஷனா சிங் கூறினார்.

குழந்தைகளின் உயிரிழப்பை தடுக்க கடுமையான நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டுமென்றும் அவர் வலியுறுத்தினார்.

வளைகுடா நாடுகளுக்கான விமான கட்டணங்கள் அதிக அளவில் உயர்த்தப்பட்டிருப்பதாக கேரளாவைச் சோந்த் காங்கிரஸ் உறுப்பினர் திருமதி ஜெபி **Mather** தெரிவித்தார்.

வளைகுடா நாடுகளுக்கு ஏழை எளிய நடுத்தர குடும்பங்களைச் சேர்ந்த தொழிலாளர்கள் அதிக அளவில் பணி புரிய செல்வதால் விமானக் கட்டணங்களை குறைக்க நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று அவர் வலியுறுத்தினார்.

நாட்டில் புற்றுநோயால் பாதிக்கப்படுபவர்களின் எண்ணிக்கை அதிகரித்து வருவதாக ஆம் ஆத்மி கட்சியின் திரு சஞ்ஜய் சிங் தெரிவித்தார்.

இது குறித்த விழிப்புணர்வை மக்களிடையே ஏற்படுத்தவும், நோய் சிகிச்சைக்கான திட்டங்களை திறம்பட செயல்படுத்த வேண்டுமென்றும் அவர் கேட்டுக் கொண்டார்.

**[]<<<>>>[]**

கேரள மாநிலம் வயநாட்டில் ஏழாவது நாளாக மீட்புப் பணிகள் நடைபெற்று வருகின்றன.

நிலச்சரிவில் புதையுண்ட உடல்கள் எடுக்கப்பட்டு வருகின்றன.

நூற்றுக்கணக்கானவர்களை தேடும் பணி நடைபெற்று வருகிறது.

மீட்புப்பணிகளுக்காக கூடுதலாக ராணுவத்தினரும், சிறப்பு பயிற்சி அளிக்கப்பட்ட நான்கு மோப்ப நாய்களும் மீரட்டிலிருந்து விமானம் மூலம் கொண்டு வருவதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

அடையாளம் காணப்படாத 67 உடல்கள் இன்று முறைப்படி அடக்கம் செய்யப்பட உள்ளதாக வயநாட்டில் உள்ள எமது செய்தியாளர் அருண் வின்சென்ட் தெரிவிக்கிறார்.

**[]<<<>>>[]**

முப்படைகளின் நிதி மாநாடு முப்படைகளின் தளபதி ஜெனரல் அனில் சௌஹான் தலைமையில் இன்று புதுதில்லியில் நடைபெறுகிறது.

முப்படைகளின் நிதி தொடர்பான அனைத்து விஷயங்கள் குறித்தும் இம்மாநாட்டில் விவாதிக்கப்பட உள்ளது.

ராணுவத்துக்கான நிதி ஒதுக்கீட்டை ஆக்கப்பூர்வமாக பயன்படுத்துவது, ராணுவ தளபாட கொள்முதலில் உள்ள பிரச்சினைகளுக்கு தீர்வு காண்பது உள்ளிட்ட முக்கிய விஷயங்கள் இம்மாநாட்டில் விவாதிக்கப்பட உள்ளன.

பாதுகாப்புக்கான நிதி ஆலோசகர், கொள்முதல் பிரிவின் தலைமை இயக்குநர், பாதுகாப்பு அமைச்சகத்தின் மூத்த அதிகாரிகள், பாதுகாப்பு கணக்காய அலுவலக அதிகாரிகள், ஒருங்கிணைந்த நிதி ஆலோசகர்கள் உள்ளிட்டோர் இந்த மாநாட்டில் பங்கேற்கின்றனர்.

**[]<<<>>>[]**

அமெரிக்காவிடமிருந்து எப்-16 ரக போர் விமானங்களை கொள்முதல் செய்துள்ளதாக உக்ரைன் தெரிவித்துள்ளது.

இந்த அறிவிப்பை வெளியிட்டுள்ள அந்நாட்டு அதிபர் திரு விளாடிமிர் ஜெலன்ஸ்கி, தங்கள் நாட்டுக்கு உதவி வரும் டென்மார்க், நெதர்லாந்து, அமெரிக்கா ஆகிய நாடுகளுக்கு நன்றி தெரிவித்துள்ளார்.

அமெரிக்காவிலிருந்து கொள்முதல் செய்துள்ள எப்-16 ரக விமானங்கள் உக்ரைன் விமானப்படைக்கு வலு சேர்க்கும் என்று அங்குள்ள ஊடகங்கள் தெரிவித்துள்ளன.

ரஷ்ய தாக்குதலிலிருந்து தங்களை தற்காத்துக் கொள்ள இது பேருதவியாக இருக்கும் என்று உக்ரைன் ராணுவத்தின் மூத்த அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

**[]<<<>>>[]**

பாதுகாப்பு காரணங்களுக்காக அமர்நாத் யாத்திரை இன்று ஒருநாள் மட்டும் ரத்து செய்யப்பட்டுள்ளது.

புலனாய்வு அமைப்பினர் அளித்த தகவலின் அடிப்படையில் பகவதிநகர் முகாலிருந்து யாத்திரிகள் செல்வது நிறுத்தப்பட்டுள்ளது.

ஜம்மு-வின் அக்னூர் பகுதியில் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டுள்ளது.

ஜம்மு-கஷ்மீருக்கு சிறப்பு அந்தஸ்து அளித்து வந்த அரசியல் சாசனத்தின் 370-வது பிரிவு நீக்கப்பட்டதன் ஐந்தாவது ஆண்டு நிறைவு தினத்தையொட்டி ஜம்மு பகுதியில் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டுள்ளதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

ஆர் எஸ் புறா பகுதியில் இந்நாளை கொண்டாடும் வகையில் பிஜேபி-யினர் பேரணி ஒன்றை நடத்துகின்றனர்.

இதில் மத்திய அமைச்சர் திரு கிஷன்ரெட்டி கலந்து கொள்கிறார்.

**[]<<<>>>[]**

வடகிழக்கு மாநிலங்களில் இன்று மிக கனமழை பெய்யக்கூடும் என்று இந்திய வானிலை ஆய்வு மையம் எச்சரித்துள்ளது.

நாகாலாந்து, மணிப்பூர், மிசோராம், திரிபுரா, மேற்குவங்கம் மற்றும் சிக்கிம் மாநிலங்களில் இன்று கனமழை பெய்யக்கூடும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

கொங்கன், கோவா, மத்திய பிரதேசம், மேற்கு ராஜஸ்தான், கிழக்கு உத்திரபிரதேசம் பகுதிகளில் அடுத்த இரண்டு நாட்களுக்கு மிதமான மழை பெய்யக்கூடும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பஞ்சாப், ஹரியானா, சண்டிகர், தில்லி பகுதிகளில் ஒருவார காலத்திற்கு ஆங்காங்கே மிதமான மழை பெய்யக்கூடும் என்று வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

உத்தராகாண்டில் நாளையும், நாளை மறுநாளும் மிக கனமழை பெய்யக்கூடும் என்றும் எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

நாட்டின் கிழக்கு பகுதிகளில் ஒருவார காலத்திற்கு இடியுடன் .கூடிய லேசான மழை பெய்யக்கூடும் என்றும், அருணாச்சல பிரதேசத்தில் இம்மாதம் ஏழு, எட்டு தேதிகளில் மிக கனமழை பெய்யக்கூடும் என்றும் இந்திய வானிலை ஆய்வு மையம் கூறியுள்ளது.

**[]<<<>>>[]**

இஸ்ரேல் மீது ஈரான் மற்றும் ஹெஸ்போலா அமைப்பு பதில் தாக்குதல் நடத்தக்கூடும் என்றும். இது குறித்து ஜி-ஏழு நாடுகள் மிகுந்த எச்சரிக்கையுடன் இருக்க வேண்டுமென்றும் அமெரிக்கா வலியுறுத்தியுள்ளது.

அமெரிக்க வெளியுறவுத்துறை அமைச்சர் திரு ஆண்டனி ப்ளிங்கன் ஜி-ஏழு நாடுகளின் வெளியுறவுத்துறை அமைச்சர்களை தொலைபேசியில் தொடர்பு கொண்டு இந்த தகவலை தெரிவித்துள்ளார்.

போர் பதற்றத்தை தணிப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டியதன் அவசியத்தையும் அவர் வலியுறுத்தியுள்ளார்.

**[]<<<>>>[]**

அமெரிக்காவில் உருவாகியுள்ள புயல் இன்று புளோரிடா மாகாணத்தின் வளைகுடா பகுதியில் ஹரிக்கேன் முதல்நிலை சூறாவளியாக தரைப் பகுதிக்கு வரும் என்று அங்குள்ள சூறாவளி எச்சரிக்கை மையம் தெரிவித்துள்ளது.

புளோரிடா, ஜார்ஜியா, தெற்கு கரோலினா உள்ளிட்ட மாகாணங்களில் சூறைக்காற்றுடன் கூடிய கனமழை பெய்யக்கூடும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தரைப்பகுதியில் மூன்று மீட்டர் உயரத்திற்கு எழுந்துள்ள சூறாவளி அப்பகுதியில் கடும் அச்சுறுத்தலை ஏற்படுத்தி உள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

புளோரிடா மாகாணத்தில் மூவாயிரத்திற்கும் மேற்பட்ட தேசிய மீட்புப் படையினரை பணியமர்த்துவதற்கு அம்மாகாண ஆளுநர் உத்தரவிட்டுள்ளார்.

புளோரிடாவின் சில பகுதிகளில் உள்ளவர்கள் வேறு பகுதிகளில் தங்க வைக்கப்படுவதற்கும் ஆளுநர் உத்தரவிட்டுள்ளார்.,

ஜார்ஜியா, தெற்கு கரோலினா மாகாண ஆளுநர்கள் சூறாவளி காரணமாக அங்கு அவசரநிலை பிரகடனப்படுத்தியுள்ளனர்.

**[]<<<>>>[]**

பாரிஸ் ஒலிம்பிக் போட்டியை நினைவுகூரும் வகையில், புதிய தபால்தலையை இந்திய அஞ்சல்துறை இன்று வெளியிடுகிறது.

இதற்கான நிகழ்ச்சி இன்று புதுதில்லியில் நடைபெறுகிறது.

**[]<<<>>>[]**

பாரிஸ் ஒலிம்பிக் பேட்மிண்டன் போட்டியின் வெண்கலப் பதக்கத்திற்கான ஆட்டத்தில் இந்தியாவின் லக்ஷயா சென் இன்று மலேசியாவின் **Lee Zii Jia–**வை எதிர்கொள்கிறார்.

இன்று நடைபெறவுள்ள மகளிர் மல்யுத்தப் போட்டியின் 68 கிலோ எடைப்பிரிவு காலிறுதிக்கு முந்தைய சுற்றில் இந்தியாவின் **Nisha Dahia** பங்கேற்கிறார்.

***End of News***